விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 212 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 02 வியாழக்கிழமை (18.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கடமையில் உள்ளவரே வைத்திய அத்தியட்சகர்

### யாழில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் தற்போது கடமை யில் உள்ளவரே (வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ்) என்று சுகா தார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் நேற்று நடை பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங் களின் கேள்விக்குப் பதிலளித்த போதே சுகாதார அமைச் சர் மேற்கண்டவாறு 16

## ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் ரணில்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுவாரென ஐக் கிய தேசியக் கட்சியின் பொதுச் செய லாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். 02

## தேர்தல் தொடர்பில் மேலுமொரு மனு

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள கைதிகளுக்கு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில் வாக் களிக்கத் தேவையான வசதி களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான 15

## கடவுச்சீட்டு விண்ணப்ப முறையில் புதிய மாற்றம்

(கொழும்பு)

கடவுச்சீட்டு விண்ணப்ப தாரர்களின் வசதிக்காக புதிய முறைமையொன்றை அறி முகப்படுத்த குடிவரவு மற்றும் குடியகல்வுத்திணைக் களம் நடவடிக்கை 15

## ஜனாதிபதித் தேர்தலை காலந்தாழ்த்துவது

# சமூக அமைதியை சீர்குலைக்கும் செயல்

### முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய



(கொழும்பு)

உரிய காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப் பட வேண்டும். மாறாக அதனை காலந்தாழ்த்துவது சமூக அமைதிக்கும் நாட்டின் நன்மதிப்புக்கும் குந்தகம் விளைவிக்கும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## யாழிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த இ.போ.ச மீது தாக்குதல்

### பயணி ஒருவர் காயம்

(வவுனியா)

மதுபானப் போத்தலால் அரச பேருந்து மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் பயணி ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித் துக் கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச்சபை வவுனியா சாலைக்குரிய பேருந்து மீது கிளிநொச்சியில் 15

## ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயார் போட்டியிட ரணில் தயாரா?

### கேள்வி எழுப்பிய நாமல் எம்.பி



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு நாங்களும் தயார் தேர்தல்கள் ஆணைக்குழுவும் தயார். தேர் தலில் போட்டியிடத் தயாரா? என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிக்க வேண்டும். தேர்தலைப் பிற் போடும் யோசனைகளை அர சாங்கம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்தால் அதற்கு ஒருபோதும் 15

## மன்னார் பொது வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் கண்காணிப்பு விஜயம்

(மன்னார்)

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன நேற்றுக் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையின் அபி விருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும், வைத்திய சாலையில் காணப் படும் குறைபாடுகள் 15

## அம்புலன்ஸ் படகில் கர்ப்பவதிக்குப் பிரசவம்

### நெடுந்தீவில் சம்பவம் தாயும் சேயும் நலம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து நேற்று மதியம் பிரசவத்திற் காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு நெடுந்தீவைச் சேர்ந்த நிறை மாத கர்ப்பவதித் தாய் ஒருவரை அனுப்பிய வேளை அம்புலன்ஸ் படகி லேயே நேற்று மதியம் 12.38 மணிக்கு சுகப் 15

## அச்சுவேலியில் விபரீத முடிவெடுத்த பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் விபரீத முடிவெடுத்து மூன்று பிள்ளைகளின் தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அல்வாய் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர்கள் என்ன சதி செய்தாலும் அரசியலமைப்பை மீற முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



ஆட்சியாளர்கள் என்ன சதி முடிச்சுக்களைப் போட்டாலும் அரசியலமைப்பை யாராலும் மீற முடியாது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பொலனறுவையில் நடைபெற்ற நிகழ்விலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலும் சமூகத்திலும் நிச்சயமற்ற நிலை, குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளனர். அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் நடக்க வேண்டியவை நடக்குமா, நடக்காதா என்பது தொடர்பில் நிச்சயமற்ற நிலையை உருவாக்கியுள்ளனர்.

ஜனநாயகத்தையும் தேசிய தேவைப்பாட்டையும் மறந்து, தங்கள் சொந்த நலன்களையும், தமது பதவிகளையும் பாதுகாத்துக் கொள்ள பல்வேறு தரப்பினரும் செயற்பட்டு வருவதே இதற்கு காரணமாகும். தங்கள் பேராசை பிடித்த வாழ்க்கை முறையைத் தக்க வைத்துக் கொள்ள நாட்டையும், ஜனநாயகத்தையும், அரசியலமைப்பையும் விற்கத் தயாரான ஆட்சியாளர்களும் இன்று இருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அரசியலமைப்பை அழிக்கவும், அதனை மீறவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். வங்குரோத்தான நாட்டில்கூட, தெளிவின்மை மூலம் நாடு குழப்பமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மக்களின் எண்ணங்களுடன் விளையாடி, தவறான புரிதலை ஏற்படுத்தி, நாட்டை குழப்பமடையச் செய்துள்ளனர். எனவே இவ்வாறான பொய்யான தோற்றப்பாடுகளை கண்டு மக்கள் ஏமாற வேண்டாம் என வேண்டுகோள் விடுக்கிறேன். நாட்டின் அதியுயர் சட்டமான அரசியலமைப்பை எவராலுமே மீற முடியாது.

யார் அதிகாரம் படைத்தவராக இருந்தாலும் சரி, யார் பலம்படைத்தவராக இருந்தாலும் சரி, அரசியலமைப்புச் சட்டம்தான் உயரிய சட்டமாகும். எனவே ஏமாற்றும் நடவடிக்கைகளை முன்னெடுக்காது தற்போது நாட்டை முன்னிலைப்படுத்தி செயற்படுவது காலத்தின் தேவையாக உள்ளது. இலங்கையை முதல்தர நாடாக ஆக்க சதிகளை மேற்கொண்டு முயற்சித்தாலும் பரவாயில்லை. இன்றோ ஆட்சியாளர்களின் பதவிகளை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் இந்த சதிகள் நடந்து வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (ம-7)

# பளை தான்தோன்றி பிள்ளையார் கோவிலில்

## ரூ.6 இலட்சத்துக்கு ஏலம்போன மாம்பழம்

கிளிநொச்சி - பளை கச்சார்வெளி தான்தோன்றி பிள்ளையார் கோவில் பூஜைக்கு வைக்கப்பட்ட மாம்பழம் 6 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போயுள்ளது.

வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பகுதியில் கச்சார்வெளி தான் தோன்றி பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், 5ஆம் திருவிழாவான மாம்பழத்திருவிழா நேற்று நடைபெற்றுள்ளது.

மாம்பழத்திருவிழாவில் வசந்தமண்டபப் பூசைகள் நிறைவுபெற்றதும் விநாயகப்பெருமானின் பூஜைக்கு வைக்கப்பட்ட மாம்பழங்கள் இரண்டு ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

இதன்போது, பக்தர்கள் ஏலம் விலைகூறி இறுதியாக 6 இலட்சம் வரை சென்றுள்ள நிலையில் கச்சார்வெளியினை சேர்ந்த அரியகுட்டி வள்ளிப்பிள்ளை பூலோகம் குடும்பத்தினர் அதனை ஆறு இலட்சம் ரூபாவிற்கு பெற்றுள்ளார்கள். (ம-7)

# உடுவில் கிழக்கில் 22 வயது யுவதி சடலமாக மீட்பு


உடுவில் கிழக்கு சுன்னாகம் பகுதியில் இளம் யுவதி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அரசடி வீதி கந்தர்மடத்தினை சேர்ந்த சந்திர மோகன் டினுஷா என்ற 22 வயது யுவதியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த யுவதியின் பெற்றோர் யுவதியை பிறிதொரு குடும்பத்திற்கு தத்து கொடுத்து இருந்த நிலையில் யுவதி நேற்று பிற்பகல் வேளை தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பிலான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளினை சுன்னாகம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம் 1960 - 12 - 27



மறைவு 2024 - 07 - 16

## முத்துச்சாமி கோணேஸ்வரன்

கோப்பாய் நாவலடியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி கோணேஸ்வரன் அவர்கள் 2024.07.16 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் மு.விக்கினேஸ்வரன் (முன்னாள் அதிபர் - யாழ்/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்) அவர்களின் சகோதரனும் வி.மங்களகௌரியின் மைத்துனரும் தாட்சாயினி, தனுசன் ஆகியோரின் சிறிய தந்தையும் க.சந்திரலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - வலயக் கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு), த.சகானவி (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பி.உ.உ.ஆ அலுவலகம், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் திஷானா, ஆராதனா, ஆரதன், ஆதிரன், அபிஸ்ரீ, ஆத்மீகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18.07.2024) வியாழக்கிழமை மு.ப 10.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் சுந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வெள்ளெருவைப் பிள்ளையார், கோவிலடி கோப்பாய்.

(C-815)

தகவல்:
மு.விக்னேஸ்வரன்
குடும்பத்தினர்
077 658 9043

## சமூக...

அமைச்சரவையினால் அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், அரசியலமைப்பில் அத்திருத்தத்தை மேற்கொள்வதற்கான உடனடித் தேவை தற்போது இல்லை எனவும் சட்டத்தரணிகள் கூட்டிணைவு, சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை பின்பற்றி உரிய காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

மாறாக, ஜனாதிபதித் தேர்தலைக் காலந்தாழ்த்துவதானது சமூக அமைதிக்கும், இலங்கை தொடர்பில் சர்வதேசத்தின் மத்தியில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் நன்மதிப்புக்கும் குந்தகம் விளைவிப்பதாகவே அமையும் எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், வன்முறைகளோ, குழப்பங்களோ அற்ற சுயாதீனமான தேர்தலை நடத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுக்கும் என நம்புவதாகத் தெரிவித்துள்ளார். (ம-7)

## விபரீத...

வடக்கைச் சேர்ந்த வாகீசன் கோமலா வயது 33 என்ற மூன்று பெண் பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் தனது நண்பி ஒருவருக்கு தனது பெயரில் வங்கியில் கடன் பெற்றுக் கொடுத்த நிலையில் நீண்டகாலமாகப் பணத்தை மீளச் செலுத்தாமையினால் மனமுடைந்த நிலையில் அச்சுவேலிப் பகுதியில் உள்ள கணவர் வீட்டுக்குச் சென்று தூக்கிட்டு உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## சுயேட்சை...

தேர்தல்கள் ஆணைக்குழுவுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் இதனைக் குறிப்பிட்ட அவர், தேர்தலை மிகக் குறுகிய காலத்திற்குள் நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவைக் கோரியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளால் ரணில் விக்கிரமசிங்கவின் வேட்புமனுவுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க அதிக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனாவில் என்பு மச்சை மாற்று சத்திரசிகிச்சை நிலையம் திறப்பு

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.போதனா வைத்தியசாலையில் என்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.**



. சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் செய்தனர். அதன் போது மேற்குறித்த சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அமைச்சர் வைத்தியசாலை வளாகத்தில் மரக்கன்றையும் நாட்டி வைத்தார்.

அத்தோடு விடுதிகள் சத்திரசிகிச்சை பிரிவுகளையும் வைத்தியசாலையின் அரும்பொருட் காட்சியகத்தையும் பார்வையிட்டதுடன் குருதி மாற்று சிகிச்சைக்கான உபகரணம் ஒன்றையும் அமைச்சர் வழங்கி வைத்தார்.

அமைச்சரின் இந்த விஜயத்தின் போது சுகாதார அமைச்சின் செயலாளர் மகிபால பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி வைத்தியசாலையின் அதிகாரிகள் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (நி-6-33)


## நோயாளர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு-நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

இதயம் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்காக ஜனாதிபதி நிதியத்தின் கீழ் செலுத்தப்படும் தொகையை 100 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த தகவலை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதன்படி விண்ணப்பம் கிடைத்த ஒரு வாரத்திற்குள் கொடுப்பனவை செலுத்துவதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)



## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதர்கள்"

**அமரர். அன்ரனிஸ் டொறத்தி (செல்வி)**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1966.02.17 | 2023.07.18 |

அன்பின் வார்த்தைகளுக்குள் எம்மை அடைத்துவிட்டு
அன்பே வடிவான ஆண்டவன்
திருப்பாதங்களில் சங்கமமான அன்புச் செல்வியே!
வேத வசனங்கள் என்றும் உன்னையும் உன்
நினைவுகளையும் எமக்குத் தந்து கொண்டேயிருக்கும்

(C-814)

18.07.2024 இன்று வியாழக்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் மாலை 4.30 மணிக்கு நினைவுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இல.25, 2ம் குறுக்குத்தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம்.
076 001 6442
076 192 7533
தகவல், குடும்பத்தினர்.




எமது நாட்டில் மிக விரைவாக வளர்ச்சியடைந்துவரும் ஆயுட் காப்புறுதி நிறுவனம்

சணச லே.ஃப் இன்சூரன்ஸ் கம்பனி பி.எல்.சி

# சிறப்பானவர்களைத் தேடுகின்றது

காப்புறுதி துறையில் முன்னணி நிறுவனமான சணச லை.ஃப் இன்ஷ்ரன்ஸ் கம்பனி பி.எல்.சி.,வாடிக்கையாளர் தேவைக்கேற்ப பாதுகாப்பினை வழங்கக்கூடிய பிரபல நிறுவனம் என்பதோடு, இலங்கையின் மிக வெற்றிகரமான மற்றும் ஏற்றுக்கொண்ட "சணச" எனும் சமூக அடிப்படையிலான அமைப்பின் ஆயுட் காப்புறுதி முன்னோடி நிறுவனமாகும்.

புதுமையான காப்புறுதி திட்டங்கள், வாடிக்கையாளர் மைய அணுகுமுறையுடன் தனது வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய உறுதியான அர்ப்பணிப்புடன் செயல்படும் ஒரு நிறுவனம் என்பதுடன் ,அதன் வர்த்தக நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்காக, நாடளாவிய ரீதியில் உள்ள கிளைகளில் காணப்படும் பின்வரும் வெற்றிடங்களுக்கு முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ திறன்களைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## கிளை முகாமையாளர்

தொழில் சார் பொறுப்புகள்
- கிளைக்காரியாலயத்திற்காக ஒதுக்கப்பட்ட விற்பனை இலக்குகளை அடைதல் மற்றும் கிளை ஊழியர்களை நிர்வகித்தல்.
- கிளையின் பணியாளர் தேவைகளின் அடிப்படையில் விற்பனை மற்றும் விற்பனை அல்லாத ஊழியர்களை பணியமர்த்துதல் மற்றும் தேவையான பயிற்சிகளை வழங்கல் .
- விற்பனை ஊக்குவிப்பு திட்டங்களை ஒழுங்கமைப்பதன் மூலம் காப்பீட்டுத் திட்டங்களை சந்தைப்படுத்துதல் மற்றும் விளம்பரப்படுத்துதல்.
- வாடிக்கையாளர்களுடன் நல்உறவுகளை பேணுதல்.
- சந்தை பகுப்பாய்வு மூலம் புதிய வணிக வாய்ப்புகளை கண்டறிதல்.
- விற்பனை அதிகாரிகளின் செயல்திறனை மதிப்பாய்வு செய்வதன் மூலம் அவர்களை மேம்படுத்தல்.

அடிப்படை தகுதிகள்
- க.பொ.த. உயர் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- SLIM/CIM அல்லது சந்தைப்படுத்தல் துறையில் டிப்ளமோ படிப்பினை மேற்கொண்டிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- காப்புறுதி துறையில் சம பதவியில் மூன்று வருட கால அனுபவம் காணப்படல் வேண்டும்.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரம் காணப்படல் வேண்டும்.

## உதவி கிளை முகாமையாளர்

தொழில் சார் பொறுப்புகள்
- தனிநபர் அல்லது குழு இலக்குகளை அடைதல் மற்றும் பணியாளர்களை நிர்வகித்தல்
- விற்பனை ஊழியர்களை இணைத்தல் மற்றும் பயிற்சி வழங்கல்.
- வாடிக்கையாளர்களுடன் நல் உறவுகளை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.
- சந்தை பகுப்பாய்வு மூலம் புதிய வணிக வாய்ப்புகளை கண்டறிதல்.

அடிப்படை தகுதிகள்
- க.பொ.த. உயர் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- சந்தைப்படுத்தல் துறையில் டிப்ளமோ படிப்பினை மேற்கொண்டிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- காப்புறுதி துறையில் சம பதவியில் மூன்று வருட கால அனுபவம் காணப்படல் வேண்டும்.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரம் காணப்படல் வேண்டும்.

## சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி

தொழில் சார் பொறுப்புகள்
- சந்தைப்படுத்தல் நிறைவேற்று பதவிக்குரிய வியாபார இலக்கினை அடைதல்.
- வாடிக்கையாளருடன் நல்உறவுகளை பேணுதல்.
- சந்தை பகுப்பாய்வு மூலம் புதிய வணிக வாய்ப்புகளை கண்டறிதல்.

அடிப்படை தகுதிகள்
- க.பொ.த. உயர் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- இதே பதவியில் குறைந்தபட்சம் 01 வருட சேவை அனுபவம் (அனுபவம் இல்லாத விண்ணப்பதாரர்களும் விண்ணப்பிக்கலாம்)
- விற்பனை அல்லது காப்பீட்டில் சான்றிதழ் படிப்பு கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரம் காணப்படல் வேண்டும்.

## வலய முகாமையாளர் – வடக்கு மற்றும் கிழக்கு

தொழில் சார் பொறுப்புகள்
- விற்பனை இலக்குகளை அடைவதற்கும், வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்திற்கான சந்தைப் பங்கினை மேம்படுத்துவதற்கும் உரிய மூலோபாயத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தல்.
- செயல்திறன் மற்றும் இலக்குகளை மீற விற்பனை வல்லுநர்களின் குழுவை வழிநடத்தவும், ஊக்குவிக்கவும் மற்றும் நிர்வகிக்கவும்.
- காப்பீட்டுத் துறையில் தரகர்கள், முகவர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் வலுவான உறவுகளை மேற்கொள்ளல் மற்றும் பராமரித்தல்.
- சந்தைப் போக்குகள், போட்டியாளர் செயல்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் கருத்துகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் வளர்ச்சி மற்றும் புதுமைக்கான வாய்ப்புகளை அடையாளம் காணல்.
- ஒதுக்கப்பட்ட வலயமானது நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்க செயற்படுவதை உறுதிசெய்தல்.
- விற்பனை செயல்திறன், சந்தை இயக்கவியல் மற்றும் முக்கிய முயற்சிகள் குறித்து உயர்மட்ட முகாமைத்துவத்திற்கு முறையான அறிக்கைகள் மற்றும் புதுப்பிப்புகளை வழங்கல்.

தகைமைகள்
- வணிக நிர்வாகம், சந்தைப்படுத்தல் அல்லது தொடர்புடைய துறையில் இளங்கலை பட்டம்.(முதுகலைப் பட்டம் விரும்பத்தக்கது.)
- காப்பீட்டு விற்பனை துறையில் குறைந்தபட்சம் 10 வருடகால அனுபவம் மற்றும் நிர்வாக அல்லது தலைமைப் பொறுப்பில் 5 ஆண்டுகள் குறைந்தபட்ச அனுபவம்.
- விற்பனை இலக்குகளை அடைவது அல்லது மீறுவது மற்றும் வணிக வளர்ச்சியை உந்துதல் ஆகியவற்றில் நிஷரூபிக்கப்பட்ட பதிவு.
- சிறந்த தலைமைத்துவம், தொடர்பாடல் மற்றும் தனிநபர் திறன்கள்.
- வலுவான பகுப்பாய்வு திறன்கள் மற்றும் மூலோபாய சிந்தனை திறன்கள்.
- வேகமான மற்றும் போட்டி நிறைந்த சூழலில் செயலாற்றும் திறன்.
- காப்பீட்டுத் துறை மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் பற்றிய அறிவு.
- ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சரளமாக பேசுதல்.

## பிராந்திய முகாமையாளர் – வடக்கு மற்றும் கிழக்கு

தொழில்சார் பொறுப்புகள்
- வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்திற்கான விற்பனை இலக்குகள் மற்றும் வணிக நோக்கங்களை அடைவதற்கான மூலோபாய திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல்.
- விதிவிலக்கான செயல்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கான விற்பனை பிரதிநிதிகளின் குழுவை வழிநடத்தல்ஊக்குவித்தல் மற்றும் வழிகாட்டல்.
- வணிக வாய்ப்புகள் மற்றும் நிறுவன நாமத்தின் இருப்பை மேம்படுத்த வாடிக்கையாளர்கள், தரகர்கள் மற்றும் பிற முக்கிய பங்குதாரர்களுடன் வலுவான உறவுகளை உருவாக்கி கொள்ளலும் பேணுதலும் .
- சந்தைப் போக்குகள், போட்டியாளர்களின் செயல்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறை மாற்றங்கள் ஆகியவற்றைக் கண்காணித்து வாய்ப்புகளைக் கண்டறிந்து அபாயங்களைக் குறைத்தல்.
- நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்தல்.
- தயாரிப்பு மேம்பாடு, சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டிற்கான முன்முயற்சிகளை இயக்க குறுக்கு-செயல்பாட்டு குழுக்களுடன் இணைத்தல்.
- செயல்திறனை மதிப்பிடுவதற்கும், தரவு சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கும் உரிய அறிக்கைகள், விளக்கக்காட்சிகள் மற்றும் பகுப்பாய்வுகளைத் தயாரித்தல்.

தகைமைகளும் அனுபவங்களும்
- வணிக நிர்வாகம், சந்தைப்படுத்தல் அல்லது தொடர்புடைய துறையில் இளங்கலை பட்டம். (காப்பீட்டு நிர்வாகத்தில் எம்பிஏ அல்லது தொழில்முறை தகுதிகள் கூடுதல் நன்மையாக எடுத்துக்கொள்ளப்படும்.)
- இலக்குகளை அடைதல் மற்றும் வணிக வளர்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவற்றில் நிஷரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு மற்றும் காப்பீட்டு விற்பனை, சந்தைப்படுத்தல் அல்லது நிர்வாக பதவி நிலைகளில் குறைந்தபட்சம் 5 வருட கால அனுபவம்.
- வலுவான தலைமைத்துவம், தொடர்பாடல் திறன் மற்றும் தனிப்பட்ட திறன்கள்.
- சிறந்த பகுப்பாய்வு மற்றும் சிக்கல்களை கையாளும் திறன்கள்.
- காப்பீட்டுத் தயாரிப்புகள், தொழில்துறை போக்குகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் பற்றிய கூடுதல் அறிவு.
- வேகமான மற்றும் போட்டி நிறைந்த சூழலில் செயலாற்றும் திறன்.

மேற்கண்ட வெற்றிடங்களுக்கு தகுதியுடையவர் என நீங்கள் கருதின், கவர்ச்சிகரமான சம்பளம், ஊக்கத்தொகை மற்றும் பல சலுகைகளுடன் வேலை வாய்ப்பை வழங்க நாமும் தயாராக உள்ளோம்.

இவ் விளம்பரம் வெளியான 07 நாட்களுக்குள் careers@sicl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் ஊஏயை விண்ணப்பத்தை அல்லது தபால் மூலம் அனுப்புவதாயின் கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


சணச Life
சணச லைஃப் இன்ஷுரன்ஸ்
SANASA LIFE INSURANCE

தலைவர்- மனிதவளம் மற்றும் நிறுவுதல் பிரிவு
சணச லே.ஃப் இன்சூரன்ஸ் கம்பனி பி.எல்.சி
இல 340 2/1, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை,
கொழும்பு 03.

(சி-2341)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மட்ட
# கோலூன்றிப் பாய்தலில் யாழ்.பல்கலை மாணவி தங்கம்



48 ஆவது தேசிய மட்ட தடகளப் போட்டியில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வடமாகாண வீராங்கனை நேசராசா தக்சிகா தனது சாதனையை தானே முறியடித்து புதிய சாதனையை பதிவு செய்து தங்கப் பதக்கத்தை கைப் பற்றியுள்ளதுடன். எஸ்.நிருஷிகா வெண்கலப் பதக்கத்தையும். கைப்பற்றியுள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான தேசிய மட்ட தடகளப் போட்டிகள் கொழும்பு ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த யாழ். பல்கலைக்கழக மாணவி நேசராசா தக்சிகா 3.51 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனையை பதிவு செய்துள்ளார். இவர் 2023 ஆம் ஆண்டு 3.50 மீற்றர் பாய்ந்த உயரத்தை இவ்வாண்டு தானே முறியடித்துள்ளார்.

இதேபோல் பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதி நிதித்துவம் செய்த அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி எஸ்.நிருஷிகா 3.30 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளார். (நி-6-90)

# முல்லை வித்தியானந்தா கல்லூரி மல்யுத்த போட்டியில் ஆதிக்கம்





வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மல்யுத்தப் போட்டியில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி ஆண்கள் பிரிவு முதலாம் இடத்தையும் பெண்கள் பிரிவு 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மல்யுத்தப் போட்டிகள் கடந்த 13 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் மு/வித்தியானந்தா கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த மாணவர்கள் 6 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளி பதக்கங்கள் உட்பட 8 பதக்கங்களைக் கைப்பற்றி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

பெண்களுக்கான போட்டியில் 2 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள் உட்பட 4 பதக்கங்களைக் கைப்பற்றி இரண்டாமிடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90-350)

# தேசிய மட்டத்திற்கு தெரிவான உடையார்கட்டு மகா வித்தியாலயம்



முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் தைக் வெண்டோ போட்டியில் வெற் றியீட்டிய மாணவர்களை கௌர விக்கும் நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

கடந்த 13,14 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு உள்ளக அரங்கில் வடமாகாண கல்வித் திணைக் களத்தால் முல்லைத் தீவு கல்வி வலயம் முல்லைத் தீவு மாவட்ட விளையாட்டுத்துறை என்பவற்றின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மாகாண தைக்வெண்டோ போட்டியில் முல் லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலய 8 மாணவர்கள் வெற்றிகளைப் பெற்றிருந்த னர்.

நான்கு மாணவர்கள் முதலாம் இடத்தினையும் இரண்டு மாண வர்கள் இரண் டாம் இடத்தினை யும் இரண்டு மாணவர்கள் மூன் றாம் இடங்களையும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.குறித்த மாணவர்கள் மாகாண மட்ட தைக்வெண்டோ போட்டியில் வெற் றியீட்டியதன் மூலம் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம் மாணவர்களை கௌர விக்கும் நிகழ்வு மகா வித்தியாலய அதிபர் தலைமையில் இடம் பெற் றது. (நி-6-350)

# வடமாகாண உதைப்பந்தாட்டம் குருநகர் சென்.றோக்ஸ் முதலிடம்

யாழ் 51 ஆவது காலால் படை இராணுத்தினர்ஏற்பாட்டில் உரும் பிராய் உதைபந்தாட்ட அக்கடமி யினரும் இணைந்து வட மாகாண ரீதியாக நடத்தப்பட்ட 14 வயது பிரிவினருக்கான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் குருநகர் சென். றோக்ஸ் அக்கடமி முதலாம் இடத்தை பிடித்துள்ளது.

குறித்த போட்டியில் 16 அக்கடமி அணிகள் பங்குபற்றியிருந்தன.

இதில் கிளிநொச்சி ஈக்கிள் ஸ்டார் அக்கடமி 2 ஆம் இடத் தையும், உரும்பிராய் உதைபந் தாட்ட அக்கடமி 3 ஆம் இடத் தையும், பாசையூர் சென்.அன்ர னீஸ் அக்கடமி 4 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.(நி-6-315-316)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை பிற்போட முயற்சித்தால் நாட்டில் வன்முறை வெடிக்கலாம்

(கொழும்பு)

**தேர்தலைப் பிற்போட முயற்சித்தால் நாட்டில் வன்முறை வெடிக்கலாம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும் எனவும் அதனை எந்த வகையிலும் ஒத்திவைக்க முடியாது எனவும் மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தி இருந்தார்.எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் முன்வைக்கப்படவுள்ளதாகவும், அதற்கான வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(நி-6)

## கட்டணங்கள் குறைக்கப்பட்டாலும் பலன்கள் நுகர்வோரைச் சென்றடைவதில்லை

### அமைச்சர் காஞ்சன சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கட்டணங்கள் குறைக்கப்பட்ட பின்னரும் அதன் பலன்கள் இதுவரை நுகர்வோரைச் சென்றடையவில்லை என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது மின்சாரம் மற்றும் எரிபொருளின் விலைகளை பாரியளவில் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இருப்பினும் இந்த நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைக் கட்டணக் குறைப்பின் பலன் இன்னும் நுகர்வோருக்கு கிடைக்கவில்லை.

மின் கட்டணம் அதிகரிக்கும் தினத்தன்று அதிகரிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டணத்தை, மின் கட்டணம் குறைக்கப்படும் அதே தினத்தில் இருந்து குறைக்க நடவடிக்கை எடுக்குமாறும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் வர்த்தக சமூகத்திடம் கேட்டுக்கொண்டார். (நி-6)

## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு

### பகிரங்க அறிவிப்பை வெளியிட்ட மகிந்தானந்த



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக பரிந் துரைப்பதற்கு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுஜன பெரமுன தரப்பில் கூறப்படும் தம்மிக்க பெரேராவுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் தாம் தீர்மானிக்கவில்லை என்றும் அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

விக்கிரமசிங்கவின் முதிர்ச்சி, சர்வதேச அனுபவம் மற்றும் தீர்க்கமான நடவடிக்கைகள் ஆகியவை, அவர் நாட்டை வழிநடத்துவதற்கு பொருத்த மானவர் என்பதற்கான முக்கிய அம்சங்கள் என்று அவர் எடுத்துரைத்துள்ளார்.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன விரை வில் இது தொடர்பான கொள்கை அடிப்படையிலான தீர்மானத்தை எட்டும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதன்படி ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படுவார், அவருடன் இணைந்து உருவாக்கப்படும் புதிய கூட்டணியில், அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## இராசிபலன்

18.07.2024
ஆடி 02, வியாழக்கிழமை
துவாதசி முன்னிரவு 7.19 மணிவரை
கேட்டை பின்னிரவு 2.48 மணிவரை

சுபநேரம்- 7.30-9.00 மணிவரை
இராகுகாலம்-1.30-3.00 மணிவரை

சந்திராஷ்டமம்
அச்சுவினி.

வளவன்

**மேஷம்** – மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** – வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** – பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் நன்மையுண்டு, உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்,எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** – மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, வருமானம் பெருக வழியமைப்பீர்கள், முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, உறவினர்களின் சந்திப்புண்டு.

**ரிஷபம்** – சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்,விரும்பிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** – பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** – வழிபாடு குதூகலம் தரும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**கும்பம்** – பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், தொழில் நலன்கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், எதிர்கால நலன் கருதி ஆக்கபூர்வமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**மிதுனம்** – பொது வாழ்வில் சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம்மாறுவர், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** – குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் நீங்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு** – தொழில் ரீதியான அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், மனக் குழப்பங்களை தவிர்ப்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்** – உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர் பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

முடிந்தவரை உன் பணியை நன்றாகச் செய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாகாண சுகாதார துறையில் ஆளணிப் பற்றாக்குறையால் நெருக்கடி

## விரைவில் தீர்வு:சுகாதார அமைச்சர்

**(யாழ்ப்பாணம்)**

**வடமாகாண சுகாதாரத் துறையில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைக்கானத் தீர்வுகளை வழங்குமாறு சுகாதார அமைச்சரிடம் வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை.**

வடக்கு மாகாண சுகாதாரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடல் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தலைமையில் நேற்று வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது இவ்வாறு தெரிவித்தார்.



வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர்கள், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் P.G. மகிபால, வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

அத்துடன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

“சுகாதார மற்றும் கல்வித் துறைகளே நாட்டில் மிகவும் சிக்கல் வாய்ந்தவைகளாக காணப்படுகின்றன. இந்த இரண்டு துறைகளிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர். எனினும் மாகாணத்தை பொறுத்த வரையில் எங்களுக்கு பல சவால்கள் காணப்படுகின்றன.

ஜனாதிபதியால் நான்கு வைத்தியசாலைகளில் திறந்து வைக்கப்பட்ட விசேட பிரிவுகளிலும் வளங்களை பகிர்ந்து பயன்படுத்துவது தொடர்பில் மற்றும் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் காணப்படும் வைத்தியசாலைகளின் குறைபாடுகள் தொடர்பில் அறிந்துள்ளோம். குறித்த வைத்தியசாலைகள் தொடர்பான முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மாகாண சுகாதார துறையில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைக்கு தீர்வுகளை வழங்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தேன். இந்த விடயம் தொடர்பில் விரைவில் தீர்வுகளை பெற்றுத்தருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.” எனத் தெரிவித்தார். (நி-6-33)

### பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு குமுழமுனை மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குமுழமுனை மகாவித்தியாலய வழிபாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் தலைமையுரை, சென்ற பொதுக் கூட்ட அறிக்கை, கணக்கறிக்கை சமர்ப்பித்தல், நிர்வாகத் தெரிவு, வேறு விடயங்கள், நன்றியுரை இடம் பெறும் எனவும் குறித்த ஒன்றுகூடலுக்கு குமுழமுனை மகாவித்தியாலய பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு குமுழமுனை பழைய மாணவ சங்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (நி-6-299)

# 35 மில். பெறுமதியான ஸ்கானர் யாழ்.போதனாவிற்கு வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்.மருத்துவபீடம், சிவபூமி அறக்கட்டளை, இணைந்து நடத்தும் கருவளச் சிகிச்சை நிலையத்திற்கு கொடையாளர் சதா.மங்களேஸ்வரன், (அபயம் அறக்கட்டளை ஊடாக) வழங்கிய 350 லட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்கான் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனால் மேற்படி ஸ்கான் இயந்திரத்தை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். (நி-6)

# வடக்கு பாடசாலைகளுக்கான கரப்பந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டிகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

இதில் ஆண்களுக்கான போட்டி ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்திலும் பெண்களுக்கான போட்டிகள் புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தா கல்லூரி மைதானத் திலும் நடைபெறவுள்ளது. மேலும் குறித்த போட்டிகள் நாளை மற்றும் நாளை மறுதினம் வரை இடம்பெறவுள்ளது. (நி-6-90)

# அமைச்சர் பங்கேற்ற நிகழ்வில் இடையூறு விளைவித்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் சுகாதார அமைச்சர் பங்கேற்ற கலந்துரையாடலில் குழப்பம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் சுகாதார மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, பாராளுமன்ற உறுப்பினர்கள்,வடக்கு மாகாண ஆளுநர், சுகாதார துறை உயரதிகாரிகள், வைத்தியர்கள் பங்கேற்புடன் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கூட்டத்தில் அநாமதேயமாக பங்கேற்ற ஒருவர் கலந்துரையாடலை முகநூல் வழியாக நேரலையில் ஒளிபரப்பியிருந்தார்.

கூட்டநிறைவில் அங்கு சுகாதார அமைச்சருடன் பேச முற்பட்ட நிலையில் அமைச்சர் அங்கிருந்து செல்லவே, கூட்டத்தில் நின்ற அதிகாரிகளுடன் குழப்பத்தில் ஈடுபட்டார்.

இதனையடுத்து சந்தேக நபரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி-6-33)



மாலை சந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகை அறிவித்தல்

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித் திட்டம்

## வீதி விளக்கு பொருத்துதல்-2024

01) தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

02) தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03) கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04) அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி (தொலைபேசி 021 228 4400) இல் இருந்து மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் 18.07.2024 ஆம் திகதியிலிருந்து 31.07.2024 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

05) அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி என்னும் முகவரியில் 18.07.2024 ஆம் திகதியிலிருந்து 31.07.2024 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2,000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06) விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 01.08.2024 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே (01.08.2024 மு.ப 11.00) வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

08) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடம் இருந்து பெற்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | வீதி விளக்குகளின் எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணை வைப்பு தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/DS/KPS/ S.Lamp/2024 | Supplying of 50W LED Street Lights | 69 Nos ±10 % | 10,000.00 | 17.10.2024 |

**தலைவா,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(c-813)

# அதிசொகுசு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து

## ஒருவர் பலி-பலர் வைத்தியசாலையில்



(கொழும்பு)

குருணாகல் மெல்சிறிபுர பகுதியில் இரு அதிசொகுசு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பேருந்து சாரதி உயிரிழந்துள்ளதோடு 8 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று புதன் கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற அதிசொகுசு பேருந்து ஒன்றும் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி சென்ற அதிசொகுசு பேருந்து ஒன்றுமே நேருக்கு நேர் மோதியுள்ளன.

விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# முன்னாள் கிரிக்கெட் வீரர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான தம்மிக்க நிரோஷன் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடை- கந்தேவத்தை பகுதியில் உள்ள அவரது இல்லத்திற்கு முன்பாக அவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொலைக்கான காரணம் தெரியாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6)

# பொது அறிவித்தல்-வலிகாமம் மேற்கு பிரதேச சபை

2323/61 ஆம் இலக்க 18.03.2023 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானி பிரசுரத்திலுள்ள எமது சபைக்குச் சொந்தமான, J/165 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள கீழ்காட்டப்படும் வீதியினை பெயர் மாற்றம் செய்யுமாறு அப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புகள் எமது சபையைக் கோரியுள்ளனர். விபரங்கள் வருமாறு,

தற்போதைய பெயர் - 2ஆம் குறுக்கு ஒழுங்கை
உப அலுவலக பிரிவு - வட்டுக்கோட்டை உப அலுவலகம்
வீதி தொடர் இலக்கம் - 143
வீதியின் நீளம் - 500m
வீதியின் ஆரம்பம் - மாவடி மூளாய் வீதி
வீதியின் முடிவு - வட்டுக்கோட்டை சந்தை வீதி
மாற்றப்படவுள்ள பெயர் - நேவி அங்கிள் கலொக் விஸ்வநாதன் வீதி

எனவே இவ்வீதி பெயர் மாற்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 02.08.2024 ஆம் திகதிக்குள் எழுத்து மூலம் செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் எனும் முகவரிக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ச.பாலரூபன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**
**சுழிபுரம். 17.07.2024.**

(169)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மிருகசீரீடம்
கி.பா: 26 1/4
7 இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/ தொழில்:A/L, Nursing Officer
எதிர்பார்ப்பு:அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/14666

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:Engineer (Australia)
எதிர்பார்ப்பு: Degree Holder, English Knowledge
தொ.இ: B/14668

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 16 3/4
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Degree (London), Supervisor
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14670

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 19 3/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bsc (Food Production Technoloy)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14006

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 11 3/4
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:Diploma in Teaching
எதிர்பார்ப்பு: உள்நாடு(அரச தொழில்), வெளிநாடு
தொ.இ: G/14008

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc, Mateial Developer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/14009

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நேபாள நிலச்சரிவு; 14 பேரின் சடலம் மீட்பு



(காத்மண்டு)

நேபாளத்தில் நிலச் சரிவால் இரு பேருந்துகள் ஆற்றுக்குள் அடித்துச் செல லப்பட்ட சம்பவத்தில் காணாமற் போனவர்க ளில் 14 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள ளது.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவுக்கு பயணித் துக் கொண்டிருந்த இரண்டு பேருந்துகளே நிலச்சரி வினால், திரிசூலி ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டிருந் தது.

இரண்டு பேருந்துகளி லும் சுமார் 65 பேரளவில் இருந்த நிலையில் காணா மற்போன குறித்த நபர் களைத் தேடும் பணிகள் பாதுகாப்பு மற்றும் மீட்புக் குழுவினரால் மேற்கொள் ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தற் போது 14 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக நேபாள செய்திகள் தெரி வித்துள்ளன.

அவற்றில் 6 இந்தியர்கள் உள்ளிட்ட 8 பேரின் உடல் கள் அடையாளம் காணப் பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும் 6 பேரின் உடல் கள் அடையாளம் காணப் படாதால் அவர்கள் அடித்துச் செல்லப்பட்ட பேருந்துகளில் இருந்தவர்களா என்பதை உறுதி செய்ய முடிய வில்லை என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பேருந்துகள் நிலச் சரி வில் சிக்குண்ட சம்பவத்தில் மூவர் மட்டுமே உயிர் தப்பி யுள்ளனர் என்றும் காணா மற் போனவர்களைத் தேடும் பணிகள் கடும் சிர மத்திற்கு மத்தியில் தொடர் ந்து வருவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ரி-6)

# ட்ரம்ப்பை கொ...
# சதித்திட்டம் தீ...

## அமெரிக்க ஊடகம் செய்தி வெளி...

(வோஷிங்டன்)

**முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்... படுகொலை செய்வதற்கு ஈரானே சதித்திட்டம் தீட்டிய... அமெரிக்க ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ள...**

அதில், குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பை படுகொலை செய்ய ஈரான் சதித் திட்டம் தீட்டியுள் ளதாகவும், இது குறித்து ஒரு வாரத்திற்கு முன்னரே அமெ ரிக்க அதிகாரிகளுக்கு இரகசி யத் தகவல் கிடைத்துள்ள தாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய 20 வயதுடைய தோமஸ் மேத்யூ க்ரூக்ஸ்க்கும், ஈரானிய சதிக்கும் நேரடி தொடர்பு உள்ளதா? என்பது குறித்து இன்னும் தெரியவரவில்லை என அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள் ளது.

எவ்வாறாயினும், இந்த சதி திட்ட குற்றச்சாட்டை திட்டவட்ட மாக மறுத்துள்ள ஈரான், இது ஆதாரமற்ற, ஈரானுக்கு களங் கம் விளைவிக்கும் குற்றச் சாட்டு என தெரிவித்துள்ளது.

ஈரான் மீதான இந்த குற்றச்சாட்டு தொடர்பாக, ஐ.நாவுக்கான ஈரானின் செய் தித் தொடர்பாளர் தெரிவிக்கை யில்,

ஈரான் நாட்டின் பார்வை யில் ட்ரம்ப் ஒரு குற்றவாளி எனவும், ஜெனரல் சுலை மானியின் படுகொலைக்காக அவர் நீதியின் முன் நிறுத்தப் பட்டு தண்டனைக்கு உட்ப டுத்தப்பட வேண்டியவர் என வும் தெரிவித்துள்ளார்.

மேலும், டொனால்ட் ட்ரம்பை, ஈரான் சட்டத்தின் வழியிலேயே சந்திக்கும் என

## பங்களாதேசில் மாணவர்கள் போராட்டம்

- அறுவர் உயிரிழப்பு
- நூற்றுக்கணக்கானோர் படுகாயம்



(டாக்கா)

பங்காளதேசில் இட ஒதுக்கீட்டை எதிர்த்து நடந்த போராட்டத்தில் மாணவர் கள் வன்முறையில் ஈடுபட் டதால் 6 பேர் உயிரிழந் துள்ளதுடன் நூற்றுக்கணக் கானோர் படுகாயமடைந் துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

குறித்த விடயம் தொடர் பில் மேலும் தெரிய வரு வதாவது,

பாகிஸ்தான் கட்டுப் பாட்டில் இருந்த பங்காள தேசம் கடந்த 1971 இல் தனிநாடாக சுதந்திரம் பெற் றது. இந்த சுதந்திர போரா ட்டத்தில் ஆயிரக்கணக் கானோர் தங்களது உயிரை தியாகம் செய்தனர்.

எனவே சுதந்திரப் போராட்ட தியாகிகளை போற் றும் வகையில் அவர்களது குடும்பத்தினருக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங் கப்பட்டு வருகிறது.

ஆனால் இந்த படைவீரர் இட ஒதுக்கீடு முறை பார பட்சமாக உள்ளது என மற்ற மாணவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். எனவே உரிய தகுதி அடிப்படையில் இட ஒதுக்கீட்டை அமுல் படுத்த வேண்டும் என அவர்கள் வலியுறுத்தி வந் தனர். எனவே உயர் நீதி மன்றத்தின் உத்தரவின்படி இந்த படைவீரர் இட ஒதுக் கீடு முறை நிறுத்தப்பட் டது.

இதனை எதிர்த்து அர சாங்கம் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்தது. அப் போது உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு தற்கா லிகமாக தடை விதிக்கப் பட்டது.

இதனையடுத்து தலை நகர் டாக்காவில் உள்ள ஜகாங்கீர் நகர் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் போராட்டம் நடத்தினர். அதேசமயம் ஆளும் அவாமி லீக் கட்சியின் மாணவர் பிரிவைச் சேர்ந் தவர்கள் இந்த போராட்டத் துக்கு எதிர்ப்பு தெரிவித் தனர்.

அப்போது இருதர... பினருக்கும் இடையே கை... லப்பு ஏற்பட்டது.

எனவே அவர்கள் கட்... மற்றும் கற்களால் மாறிமா... தாக்கிக் கொண்டனர்...

இதனையடுத்து அங்... விரைந்த பொலிஸா... கண்ணீர் புகைக்குண்... வீசி மாணவர்களை கலை... ந்து போகச் செய்தனர்.

இந்த வன்முறையில் ... மாணவர்கள் உயிரிழந்து... ளதாக தகவல் வெளியா... உள்ளது. மேலும் பொ... ஸார் உட்பட நூற்றுக்கு... மேற்பட்டோர் படுகாய... அடைந்தனர். இதனா... அங்கு பெரும் பதற்... நிலவி வருகிறது.

குறித்த இதேவேளை... நாடு முழுவதும் உள்ள ப... ளிகள் மற்றும் பல்கலை... கழகங்களை காலவரை... யின்றி மூட அரசு உத்த... விட்டுள்ளது. (நி-...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாலை செய்ய
# ீட்டிய ஈரான்!

ளியீடு

ட்ரம்பை
டியதாக
ளது.



வும் ஐ.நாவுக்கான ஈரானின் செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பென்சில்வேனியா மாநாட்டுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே சதித் திட்டம் தொடர்பான எச்சரிக்கை கிடைத்ததாகவும், இது குறித்து ட்ரம்ப் பேரணி ஒருங்கிணைப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டதாகவும் அமெரிக்க தேசிய பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே, ட்ரம்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாக தெரிவித்த அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு அதிகாரிகள்,

இந்த சதித் திட்டம் பற்றி தாம் முன்னதாகவே அறிவித்ததை தற்போது, ட்ரம்ப் பேரணி ஒருங்கிணைப்புக் குழு மறுத்துள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பென்சில்வேனியாவில் 50 ஆயிரம் பேர் திரண்டிருந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.இதில், அவரது காதில் காயம் ஏற்பட்ட நிலையில் நூலிழையில் உயிர் தப்பினார். இந்தத் தாக்குதலில் அவரது ஆதரவாளர் உயிரிழந்தார்.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபரை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர்.இந்தச் சம்பவம் உலக அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

ருதரப்
ய கைக
கட்டை
றிமாறி
டனர்.
அங்கு
லிஸார்
குண்டு
ா கலை
ர்.
யில் 6
ழந்துள்
ளியாகி
பொலி
றுக்கும்
காயம்
தனால்
தற்றம்
வேளை
ள்ள பள்
கலைக்
லவரை
உத்தர
(நி-6)

## போராட்டக்காரர்களின் தாக்குதலில் கொங்கோவில் 70 பேர் உயிரிழப்பு

(கின்ஷாசா)



ஆபிரிக்காவில் மூன்றாவது பெரிய நாடான கொங்கோவில் போராட்டக்காரர்களின் தாக்குதலில் 70 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

கொங்கோ தலைநகர் கின் ஷாசாவிலுள்ள கின்செல் கிராமத்தில், கடந்த சில ஆண்டுகளாக இரண்டு சமூகங்களுக்கு இடையே மோதல் நிலை நீடித்து வருகின்றது.

இந்நிலையில், கொங்கோ கிழக்கில் போராளிகள் ஆயுதங்களுடன் போரிட்டு வரும் நிலையில், நாட்டின் மேற்கு பகுதியிலும் வன்முறை தீவிரமடைந்துள்ளது.


இந்த தாக்குதலில் 9 இராணுவ வீரர்கள் உட்பட 70 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், இந்த பகுதியில் வன்முறையை கட்டுப்படுத்த இராணுவத்தினர் போராடி வருகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் கொங்கோவின் ஜனாதிபதி பெலிக்ஸ் சிசெகெடி முன்னிலையில் போர் நிறுத்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும், இரு சமூகங்களுக்கிடையில் மோதல்கள் தொடர்ந்து தீவிரமடைந்துள்ளன.

கொங்கோ இராணுவம் வன்முறையை அடக்குவதில் தோல்வியடைந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வரலாற்று குடிமக்கள் மற்றும் கொங்கோ ஆற்றின் அருகே குடியேறிய யக்கா உள்ளிட்ட பல்வேறு இனங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இடையே, நில உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பெரு நாட்டில் பேருந்து விபத்து
## 26 பேர் உயிரிழப்பு



(பெரு)

பெரு நாட்டில் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் மேலும் 14 பேர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 656 அடி உயரமுள்ள குன்றின் மீது பேருந்து கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

மேலும் விபத்தின் போது பேருந்தில் 40 இற்கும் மேற்பட்டோர் இருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-6)

# ட்ரம்பிற்கு ஆதரவு கரம் நீட்டிய எலான்



(வோஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு தேர்தல் நிதியாக 45 மில்லியன் டொலர் எலான் மஸ்க் வழங்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வருகின்ற நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்கா ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிக்கவுள்ளதாக முதலில் எலான் மஸ்க் தெரிவித்திருந்தார். இருப்பினும் மறைமுகமாக ட்ரம்புக்கு ஆதரவாக அமெரிக்க தொழிலதிபர்களுடன் மஸ்க் பேச்சு வார்த்தை நடத்தி வருவ தாக தகவல்கள் வெளி யான நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ட்ரம்ப் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு பிறகு வெளிப்படையாக மஸ்க் ஆரதவை அறிவித்தார்.

இந்த நிலையில் ட்ரம்புக்கு தேர்தல் வியூகம் வகுக்கும் சூப்பர் பிஏசி நிறுவனத்திடம் 45 மில்லியன் டொலர் நிதி வழங்க உறுதி அளித்துள்ளதாக 'தி வால் ஸ்ட்ரீட் ஜனரல்' திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

வரும் நவம்பர் 5 ஆம் திகதி அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் அந்நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன், குடியரசுக் கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் வேட்பாளர்களாக போட்டியிடுவது உறுதியாகி விட்டது. ட்ரம்ப் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதில் அவர் காது பகுதியில் காயம் ஏற்பட்டது. இந்த துப்பாக்கி சம்பவத்திற்கு பிறகு ட்ரம்புக்கான ஆதரவு அதிகரித்துள்ளதாக அமெரிக்க அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஓமானில் விபத்திற்குள்ளான கப்பல்

# இலங்கையர்கள் உள்ளிட்ட 16 பேர் மாயம்

(மஸ்கட்)

ஓமானில் விபத்துக்குள்ளான் கப்பலில் கடமையாற்றிய மூன்று இலங்கைப் பணியாளர்கள் உள்ளிட்ட 16 பணியாளர்களை காண வில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் காணாமல் போயுள்ள ஏனையவர்கள் இந்தியர்கள் என கூறப்படுகின்றது.

ஏமனின் ஏடன் நகர் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பிரஸ்டிஜ் பெல்கொன் என்ற கப்பலே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

கமரூன் நாட்டு கொடியுடன் பயணித்த எண்ணெய்த் தாங்கிக் கப்பல் ஒன்றே குடைசாய்ந்து, கடலில் மூழ்கி விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கப்பலில் பயணித்த பணியாளர்களை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(நி-6)

# ஏற்றுமதிப் பயிர்களுக்கான உரவிலை குறைப்பு

### விவசாய அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

ஏற்றுமதிப் பயிர்களுக்கான உரங்களின் விலைகளைக் குறைப்பதற்கு கமத் தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி கறுவா, தேயிலை மற்றும் தென்னை போன்ற பெருந்தோட்டப் பயிர்களுக்கு பயன்படுத்தப்படும் பல வகையான உரங்களின் விலைகளே குறைக்கப்படவுள்ளன.

இந்த உரங்களின் விலைகளை 1500-2000 ரூபாவால் மேலும் குறைக்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று அரச உரக் கம்பனிக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த விலை குறைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 300 | 200 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 370 | 300 | 250 | 230 | 280 |
| பச்சைமிளகாய் | 450 | 350 | 400 | 500 | 450 |
| தக்காளி | 450 | 300 | 420 | 300 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 160 | 160 | 120-140 | 200 |
| கோவா | 400 | 400 | 400 | 250 | 350 |
| கரட் | 450 | 500 | 500 | 350 | 500 |
| பூசணி | 200 | 200 | 200 | 150 | 280 |
| புடோல் | 180 | 350 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 260 | 200 | 160-200 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 400 | 250-450 | 320 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 250 | 260 | 200 |
| பாகற்காய் | 1200 | 700 | 800 | 800 | 800 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 350 | 400-550 | 350 |
| லீக்ஸ் | 520 | 500 | 500 | 350 | 600 |
| பீற்றூட் | 500 | 450 | 500 | 500 | 480 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 460 | 900 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 450 | 450-600 | 800 |
| போஞ்சி | 600 | 650 | 650 | 400 | 600 |
| கத்தரி தம்புள்ள | 150 | 150 | 200 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 800 | 700 | 600 | 400-500 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 90 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 600 | -- | 500 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 450 | -- | 450 |
| முள்ளங்கி | 120 | 120 | 140 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 60 | 100 | 80 |

## இன்று ஒரு தகவல் 186



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# நேர்மை

அபு அனிபா என்று ஒரு பெரியவர் இருந்தார். இஸ்லாமியப் பெரியவர். அவர் ஒரு நெசவாளர். மிகவும் ஏழ்மையான நிலைமையிலே இருந்தார். அவர் என்ன செய்வார் என்றால் தினமும் தானே கையாலே நூல் நூற்று நெசவு செய்வார். துணிகளை தயார் செய்வார். அதையெல்லாம் தோளிலே போட்டுக் கொண்டு தெருத்தெருவாகச் சென்று விற்பனை செய்வார். அதனால் வரக்கூடிய சொற்ப வருமானத்தை வைத்துக் கொண்டு அவர் வாழ்கை நடத்திக் கொண்டு இருந்தார்.

அவர் ஒரு நாள் பாலைவனப்பகுதி வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அவருடன் இன்னும் இரண்டு நண்பர்களும் போய்க்கொண்டிருந்தார்கள். வழியிலே ஒரு ஆள் பேரீச்சம்பழம் விற்றுக் கொண்டிருந்தார். எப்படி விலை என்று விசாரித்தேன். ஒரு காசிற்குப் பத்துப் பழம் என்றார் அவர் (அந்த ஊர் காசு). சரி ஒரு காசுக்குப் பழம் கொடு அப்படியே சருகிலே வைத்து கட்டிக்கொடுத்து விடு வழியிலே சாப்பிடுகிறோம் என்றார் அந்த பெரியவர். அதே மாதிரி அந்த ஆளும் ஒரு உலர்ந்த சருகிலே பழத்தை வைத்து கட்டிக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டு இவரும் மற்ற இரண்டு பேரும் போய்க் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் போய்க்கொண்டிருப்பது பாலைவனம் இல்லையா? அதனாலே எங்கே யாவது தண்ணீர் கிடைக்கின்ற இடமாகப் பார்த்து உட்கார்ந்து பழத்தைச் சாப்பிடலாம் என்று நினைத்துக் கொண்டே போகின்ற போது வழியிலே ஒரு நீர்நிலை தெரிந்தது. அங்கே போய் மூன்று பேரும் உட்கார்ந்தார்கள். பெரியவர் பொட்டலத்தைப் பிரித்தார்.

பத்துப் பழம் தானே இருக்க வேண்டும். பதினொரு பழம் இருக்கின்றது. ஒரு பழம் அதிகமாக இருந்தது. அதைப் பார்த்ததும் பெரியவர் பதறிப் போய்விட்டார். ஒரு காசிற்குப் பத்துப்பழம் என்று தானே அவர் சொன்னார். கை தவறுதலாக அந்த வியாபாரி ஒரு பழம் கூடுதலாக வைத்து விட்டாரே இது அவருக்கு நட்டமாகி விட்டதே. இப்போது என்ன செய்வது என்று என்று யோசித்தார்.

சரி திரும்பப் போய் அந்தப் பழ வியாபாரியைச் சந்தித்து இந்த ஒரு பழத்தைக் கொடுத்து விடுவோம் என்று புறப்பட்டார். பக்கத்திலே இருந்த நண்பர்கள் சிரித்தார்கள். என்ன இது வேடிக்கையாக இருக்கின்றது. ஒரே ஒரு பேரீச்சம்பழத்தைத் திரும்ப கொடுப்பதற்காக மூன்றுகால் தொலைவு திரும்பி நடக்க வேண்டுமா? இது தேவை தானா? என்றார்கள். பெரியவர் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. வியாபாரத்திலே நாங்கள் காசு கொடுத்து அதற்கு சரியாக ஒரு பொருளை வாங்குகின்றோம். அது தான் நியாயம். அதிக படியாக ஏதும் கொடுத்தால் அது விலக்கப்பட்ட பொருள். அது நம்மை சேரக்கூடாது அபாரதமானது என்று சொல்லிவிட்டு நேராக அந்த வியாபாரியைத் தேடிப் போனார்.

அந்த ஒரு பழத்தைத் திரும்பிக் கொடுத்தார். ஆனால் அந்த ஆள் என்ன சொன்னார் தெரியுமா? ஐயா அந்த ஒரு பழத்தை நான் தெரியாமல் கொடுக்கவில்லை. உங்கள் தோற்றத்தைப் பார்த்ததும் உங்கள் மேல் ஒரு மரியாதை ஏற்பட்டது. அதனாலே தான் ஒரு பழத்தை அதிகமாக வைத்து கட்டிக் கொடுத்தேன். பரவாயில்லை வைத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்தார். ஆனால் இந்தப் பெரியவர் அதற்கு சம்மதிக் கவில்லை.

வணிகத்திலே வியாபாரத்திலே வாங்குகின்றவர் ஒருவர் விற்கின்றவர் ஒருவர். இரண்டு பேரும் இவ்வளவிற்கு இவ்வளவு என்று ஒரு உடன்பாட்டிற்கு வருகின்றார்கள். அதன்படி நடக்கின்றார்கள். அது தான் வியாபாரம். அந்த உடன்பாட்டிற்கு ஒத்துப் போவது தான் நியாயம். அந்த நியாயம் தவறி நாங்கள் நடக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு பழத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வந்துவிட்டார். நேர்மை, நியாயம் அதற்கெல்லாம் இலக்கணம் அந்த இஸ்லாமியப் பெரியவர்.

இந்தக் காலத்திலே எல்லாம் நாம் அப்படியா நடந்து கொள்கின்றோம். நீங்களே கொஞ்சம் நன்றாக யோசித்துப் பாருங்கள். மேலதிகம் இல்லை என்றால் இப்போது வியாபாரமே நடக்கிறது இல்லை. அதுமட்டுமில்லை வாங்குகின்றவர் விற்பவரை எப்படி ஏமாத்தலாம் என்று பார்க்கிறார். விற்பவர் வாங்குபவரை எப்படி ஏமாற்றலாம் என்று பார்க்கின்றார். சாமர்த்தியசாலிகள் பிழைத்துக் கொள்வார்கள்.

ஒருவர் அப்படி தான் மாம்பழம் வாங்கினார். ஒரு பழம் ஒரு ரூபாய் என்றார் கடைக்காரர். பத்து ரூபாய்க்குப் பழங்கள் கொடுங்கள் என்றார் இவர். அவர் பத்துப்பழம் கொடுத்தார். அவர் அடித்துப் பிடித்து பேசி ஒரு பழம் அதிகமாக வாங்கிக் கொண்டு வந்து விட்டார். வந்ததன் பின் பாவம் அந்தக் கடைக்காரர் என்று வருத்தப்பட்டார்.

நீங்கள் தானே அடித்துபிடித்து கட்டாயப்படுத்தி ஒரு பழம் அதிகமாக வாங்கினீர்கள். இப்போது நீங்களே வருத்தப்பட்டால் எப்படி என்று கேட்டார் வீட்டுக்கார அம்மா. நான் அதற்காக வருத்தப்படவில்லை. நான் அவரிடம் கொடுத்தது செல்லாத காசு பாவம் அவர் எப்படி அதை மாற்றுவாரோ என்று நினைத்து வருத்தப்பட்டேன் என்றார் அவர். இதே நேரத்திலே அந்தக் கடைக்காரரும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். புளிப்பான பழத்தை அவர் தலையிலே கட்டிவிட்டோமே எப்படித்தான் சாப்பிடப்போறாரோ என்று நினைத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜாங்க அமைச்சர் திலும் மாங்குளத்திற்கு விஜயம்



(கண்டாவளை)

மாங்குளம் பிரதேசத்தில் அமையவுள்ள விசேட முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட கள விஜயம் ஒன்றினை கடந்த 13 ஆம் திகதி முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்திலும் அமுனுகம தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

மாங்குளத்தில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் விசேட முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் உருவாக்கும் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யவுள்ள பிரதேசத்தினை பார்வையிட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்ளும் நோக்கில் அமைச்சரின் கள விஜயம் அமைந்திருந்தது.

இக் கள விஜயத்தில் முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் எம். எம்.நயுமுதீன், மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன், முதலீட்டு ஊக்குவிப்புச் சபை அதிகாரிகள், ஒட்டு சுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-6-315)

# வட்டு. வைத்தியசாலையில் நோயாளர் விடுதி திறந்து வைப்பு




(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை யின் நோயாளர் விடுதி, புதிதாக அமைக்கப்பட்ட வாகனத் தரிப்பிடம், நலன்புரிச்சங்க சிற்றுண்டிச்சாலை என்பனவும் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எஸ்.செந்துாரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பி.ஜி.மஹிபால, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.பத்திரன, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், பதவி நிலை வைத்திய அதிகாரிகள், வைத்திய சாலை பணியாளர்கள், நலன்புரிச் சங்கத்தினர், சமூக மட்ட பொது அமைப்பினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (நி-6-33)

# ஆடிப்பிறப்பும் கலை நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆடிப்பிறப்பும் கலைகலசார நிகழ்வும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நட்சத்திரமகால் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் கதிர் காமநாதன் சந்திரகுமார் தலைமையில் நடை பெற வுள்ள இவ் நிகழ்வில் பிரதம விருந்திகராக வடக்கு மாகாண பண் பாட்டலுவலகத்தின் பணிப்பாளர் திருமதி . லாகினி நிருபராஷ் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவதுடன் கலை நிகழ்வுகளும் காத்தவராயன் கூத்தும் இடம் பெறவுள்ளது(நி-6)

# இரணைதீவு படகு சேவையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

**கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இரணைதீவு பகுதிக்கான போக்குவரத்து வசதியின்மையால் குறித்த பிரதேச மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.**

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இரணைதீவுப் பகுதியில் வாழ்ந்த மக்கள்.கடந்த 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளால் இடம் பெயர்ந்து 27 வருடங்களின் பின்னர் கடந்த 2017 ஆம் ஆண்டு மீள் குடியமர்விற்காக அனு மதிக்கப்பட்டதையடுத்து குறித்த பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேறி உள்ளனர்

இந் நிலையில் குறித்த பகுதிக்கான பிரதான போக்குவரத்து மார்க்கமாக காணப்படுகின்ற சுமார் ஏழு கடல் மைல் தூரத்துக்கான படகு சேவை இன்மையால் மீன்பிடி படகுகளிலேயே குறித்த மக்கள் தங்களுடைய பயணங்களை மேற் கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதிக்கான பொது போக்குவரத்து படகு சேவைகள் எதுவும் இல்லாத நிலையில் மீன் பிடி படகுகளிலேயே பயணித்து வருவதாகவும் குறித்த பகுதிக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் (நி-6-315)

# ஜனாதிபதியின் புலமைப்பரிசில் திட்டம் வவுனியாவில் வழங்கி வைப்பு



(குருமன்காடு)

வறிய மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியின் புலமைப் பரிசில் திட்டம் வவுனியா மாவட்டத்தில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதியின் புலமைப்பரிசில் இதன் போது வழங்கிவைக்கப்பட்டது.

வவுனியா, மதவுவைத்தகுளம் பகுதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர்மஸ்தான், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவருமான கு.திலீபன், ஜனாதிபதி செயலக மேலதிக சிரேஸ்ட செயலாளர் சமன் பந்துலசேன, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர, மேலதிக அரசாங்க அதிபர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வவுனியா தெற்கு மற்றும் வடக்கு வலய கல்விப் பணிப் பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், அதிபர்கள், ஆசிரி யர்கள், மாணவர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (நி-6-250)

# இரண்டாம் மொழி பயிற்சி நெறிக்கான சான்றிதழ்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பணி புரியும்பரிசோதகர்,சுகாதார உதவியாளர்கள் மற்றும் சாரதிகளுக்கான நூறு மணித்தியாலங்களைக் கொண்ட இரண்டாம் மொழி சிங்களப் பயிற்சி நெறி, இரண்டாம் பிரிவினருக்கான இறுதிநாள் நிகழ்வும் சான்றிதழ்கள் வழங்கும் வைபவமும் யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது . (நி-6-33)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 535





என்று மெல்லிய குரலில் கேட்டாள். நாம் இங்கே நின்ற பிறகு காலடி சத்தம் கேட்கவில்லை. அவன் இங்கே தான் பக்கத்தில் எங்கேயோ மறைந்து நிற்க வேண்டும். அவன் யார் என்று உனக்குத் தெரியுமா?"

பூங்குழலி இரைந்து, தெரியாமல் என்ன? நன்றாய்த் தெரியும். கோடிக் கரை ஆந்தைகளைப் பற்றிச் சுந்தரர் பாடியிருப்பது தானே? இதோ கேள்!

காடேன் மிகவால் இது காரிகையஞ்சக்கூடிப் பொந்தில் ஆந்தைகள் கூகை குழற வேடித் தொண்டர் சாலவுந் தீயர் சழக்கர்

கோடிக் குழகா விடங் கோயில் கொண்டாயே!

பார்த்தாயா! அமுதா! சுந்தர மூர்த்தியின் காலத்தில் ஆந்தைகளும் கூகைகளும் இன்று போலவே இக் காட்டில் கத்தியிருக்கின்றன. ஆனால் இப்போது இக் காட்டில் மனிதர்கள் கூட ஆந்தைபோல சத்த மிடுகிறார்கள். சற்றுமுன் அத்தகைய குரல் ஒன்று கேட்டேன். அந்தத் தீய சழக்கர் யாராயிருக்கும் என்று உனக்கு ஏதாவது தெரியுமா?" இப்படி உரத்த குரலிலேயே பூங்குழலி கேட்டாள். கேட்டுவிட்டு, எனக்கு அம்மாதிரி கத்த வருகிறதா என்று பார்க்கிறேன். ஆந்தைக் குரல் மாதிரி இருக்கிறதா, கேட்டுச் சொல்லு! என்றாள்.

பின்னர், ஆந்தை மாதிரியே மூன்று தடவை குரல் கொடுத்தாள். "அப்படியே ஆந்தைக் குரல் மாதிரியே இருக்கிறது! தேனினும் இனிய குரலில் தெய்வீகக் கீதங்களைப் பாடுவாயே? இதை எங்கே கற்றுக் கொண்டாய்?" என்று அமுதன் கேட்டான்.

மந்திரவாதி ஒருவனிடம் கற்றுக்கொண்டேன். மந்திரம் பலிப்பதற்கு இப்படி ஆந்தை போலக் கத்தத் தெரிந்திருக்க வேண்டுமா!"

உனக்கு மந்திரவித்தை கூடத் தெரியுமா, என்ன? ஏதோ கொஞ்சம் தெரியும். என்னுடைய மந்திர சக்தியைப் பரீட்சித்துப் பார்க்கிறாயா?" எப்படிப் பரீட்சிக்கிறது?"

"இப்பொழுது நாம் பேசுவதையெல்லாம் நமக்குப் பக்கத்தில் ஒருவன் மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருக்கிறான். நீ வேண்டுமானால் தேடிப் பார்!"

இவ்விதம் பூங்குழலி கூறி வாய் மூடுவதற்குள்ளே காட்டில் சலசலப்புச் சத்தம் கேட்டது. மந்திரவாதி ரவிதாஸன் மறைவிலிருந்து வெளியே வந்தான். "ஹா ஹா ஹா!" என்று சிரித்துக் கொண்டே வந்தான்.

பெண்ணே! அப்படியா சமாசாரம்? உனக்குத் தந்திரம் தான் தெரியும் என்று நினைத்தேன் மந்திரம்கூடத் தெரியுமா?" என்று கேட்டான்.


அட பாதகா! நீதானா? பெண்ணே! நான் யார், என்று உனக்குத் தெரியுமா?"

"இலங்கையில் இளவரசரைக் கொல்லப்பார்த்தவன் நீ! அது உன்னால் முடியவில்லை. ஆகையால் நடுக்கடலில் மந்திரம் போட்டுச் சுழற்காற்றை வரவழைத்து இளவரசரையும் அவருடைய சிநேகிதனையும் மூழ்கடித்து விட்டாய்!"

அவர்கள் மூழ்கியது உனக்கு எப்படி நிச்சயமாகத் தெரியும்? நீ பார்த்தாயா?"

"இரண்டு பேருடைய உடல்களும் கரையில் வந்து ஒதுங்கின. பூதத் தீவிலே குழி தோண்டி அவர்களைப் புதைத்து விட்டு வந்தேன். துரோகி! உன் மந்திரத்தில் இடி விழ!

"பெண்ணே! என்னை ஏமாற்றப் பார்க்காதே! என்னுடைய மந்திரத்திற்குப் பதில் மந்திரம் போட்டு நீ அவர்களை உயிர் பிழைக்கச் செய்யவில்லையா? ஐயோ! அது எப்படி உனக்குத் தெரிந்தது? இந்த ரவிதாஸனுக்குப் புறக்கண்ணைத் தவிர அகக்கண்ணும் உண்டு. நூறு காததூரத்தில் நடப்பதையும் என்னுடைய மந்திரசக்தியினால் தெரிந்து கொள்வேன். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## எல்லா உயிர்களுக்கும் உதவிசெய்

குளத்திற்குள் ஒரு மோதிரத்தை போட்டு அதனை எடுக்க வேண்டும் என கட்டளையிட்டார்கள் அவன் பயந்து மலைத்து நின்றான்.

குளத்திற்குள் நீந்த ஆரம்பித்த அவனுக்கு ஆச்சரியம்! "இதோ உங்கள் மோதிரம்" என்று ஒரு குரல் கேட் டது. ஒரு மீன் தன் வாயில் மோதிரத்தைக் கவ்விக் கொண்டு வந்தி ருந்தது. அது அவன் புதலிருந்து காப்பாற்றிய மீன்.

இளவரசி அடுத்த போட்டி வைத்தாள். ஒரு மூட்டை அரிசி முழுவதும் தோட்டத்தில் கொட்டப்பட்டு



விடிவதற்குள் ஒரு அரிசி விடாமல் சேகரிக்க வேண்டும். ஆகா இது நடக்கவே நடக்காது நமக்கு சிறைதான் என்று முடிவு செய்து அவன் தூங்கி விட்டான்.

அவன் உதவி இருந்த எறும்புகள் ஒவ்வொன்றாக பொருக்கி ஒரு மூட்டையில் வைத்திருந்தது. அதனால் அதிலும் ஜெயித்து விட்டான்.

இறுதியான போட்டி ஒரு தங்க ஆப்பிள் காய்க்கும் மரம் காட்டில் இருக்கிறது. அதைக் கண்டு பிடித்து ஆப்பிளை எடுத்து வர வேண்டும்.

அவன் இருட்டும் வரை தேடினான் பசுமை மரங்கள் மட்டுமே இருந்தன.

தங்க மரத்தைக் காணவே இல்லை. கவலையுடன் இருட்டியபிறகு தூங்கி விட்டான்.

காலையில் எழுந்து பார்க்கிறான் அவன் அருகில் தங்க ஆப்பிள் இருந்தது. அவனிடம் உதவி பெற்ற காகங்கள் அந்த ஆப்பிளைத் தேடிக் கொண்டு வந்து அவனிடம் போட்டிருந்தன. அவன் அவைகளுக்கு நன்றி தெரிவித்தான்.

எல்லா போட்டியிலும் ஜெயித்ததால் அவனை இளவரசி மணந்து கொண்டாள். அவன் ராஜாவாக அவளுடன் அந்த நாட்டை மகிழ்ச்சியுடன் வெகு நாள் ஆட்சி செய்தான்.

நாம் செய்த உதவி வீணாகாது. அது நமக்கு ஏதாவதொரு வகையில் எப்போதாவது பயன் தரும்.

நாம் யாரேனும் ஒருவருக்கு உதவி செய்து விட்டு மறந்து விட்டாலும் கூட அது பின்னொருநாளில் நமக்கு யார் வாயிலாகவாவது கிடைக்கும்.

செஞ்ச உதவியும் இட்டுவைத்த விதையும் வீணாகப்போகாது.

மிக மிக அவசியமான நேரத்தில் செய்யப்படும் உதவி இந்த உலகை விட மிகப் பெரியது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை நாம் அனுமதிக்கும் போதே அவை நம்மை தடம் மாற்றி விடுகின்றன. - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மருத்துவர் அர்ச்சுனா முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் உறங்குமாயின்...

மக்கள் எழுச்சியை கண்ணியமாக ஏற்றுக் கொள்கின்ற பக்குவம் இன்னமும் நம் இனத்தவர்களிடம் ஏற்படவில்லை என்பதை இவ்விடத்தில் ஏலவே குறிப்பிட்டுள்ளோம்.

உதாரணத்துக்கு முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்காக எழுந்த மக்கள் அலையை அவர் இம்மியும் தக்க வைக்கவில்லை.

இதேபோலத்தான் மருத்துவர் அர்ச்சுனாவுக்காக தென்மராட்சியில் மக்கள், எழுச்சி கொண்டனர். இருந்தும் அந்த எழுச்சியை மருத்துவர் அர்ச்சுனா தக்கவாறு ஏந்திக் கொள்ளவில்லை.

அதனால் நிலைமை எப்படியாயிற்று என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

என்ன செய்வது எல்லா விடயத்திலும் எங்கள் தலைவிதி இப்படியாகிவிடுவது வேதனைக்குரியது.

எதுஎவ்வாறாயினும் மருத்துவர் அர்ச்சுனா முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தனிப்பட்டதன்று. மாறாக பொதுமக்கள் சார்ந்தவை. பொதுமக்கள் சார்ந்த விடயத்தை முன்வைத்ததனாலேயே மக்கள் எழுச்சி கொண்டனர்.

இதை நாம் கூறும்போது முடிந்த விடயங்களை பேசாது விடுவதுதான் நல்லதென யாரேனும் கருதலாம்.

இல்லை. இங்குதான் நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

அதாவது மருத்துவர் அர்ச்சுனா முன்வைத்த குற்றச்சாட்டுக்களில் ஒரு பகுதியை பொதுமக்கள் அங்கீகரித்துள்ளனர் என்பதற்கு பொதுமக்களே சாட்சி.

தவிர, மருத்துவர் அர்ச்சுனா ஒரு சில மருத்துவர்கள் மீதும் மருத்துவம் சார்ந்த சில உயர் அதிகாரிகள் மீதும் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும்.

அந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டும் என மருத்துவ சங்கங்கள் கோரிக்கை விட வேண்டும்.

ஏனெனில், குற்றங்களை விசாரிப்பது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரானதென யாரும் கருதிவிடக்கூடாது.

மாறாக, முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்குட்படும்போதுதான் குற்றமற்றவர் என்பதும் நிரூபிக்கப்படும்.

ஆகையால் மருத்துவர் அர்ச்சுனா முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய தரப்புகள் விசாரணை நடத்த வேண்டும்.

அதன்மூலம் அவர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் உண்மையானவையா? அல்லது இயற்றப்பட்டவையா? என்பது கண்டறியப்படும்.

**இது விடயத்தில் அரச மருத்துவ சங்கம் மௌனம் காக்குமாயின், குறித்த சங்கத்துக்குப் பொதுமக்கள் மீது - இந்தச் சமூகத்தின் மீது எந்தக் கருசனையும் இல்லை என்பதாக நிலைமை முடிந்து போகும்.**

அதேநேரம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை வேண்டும் என்பதைப் பொதுமக்கள் வலியுறுத்த வேண்டும். இது தொடர்பில் பொது அமைப்புகள் தாமாக முன்வந்து நீதிமன்றத்தின் உதவியை நாடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை இடம்பெறுவதற்கு உதவி செய்வதும் அவசியம்.

இதைச் செய்யாமல் குற்றச்சாட்டுக்கள் உறங்க விடப்படுமாயின், குற்றவாளிகள் விஸ்வரூபம் எடுப்பர் கவனம்.

## பாராளுமன்றில் மகிந்தவை பாராட்டிய ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அண்மையில் பாராளுமன்றத்தில் பாராட்டிய தாகக் கூறிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ, கொள்கை விடயங்களைத் தவிர தமக்கு எவருடனும் தனிப்பட்ட முரண்பாடுகள் இல்லை என தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு விஜயம் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தங்களுக்கு அரசியல் வேறுபாடுகள் மட்டுமே உள்ளன. அநுர குமாரவும் நாங்களும் எதிரிகள் என நீங்கள் அனைவரும் நம்பியிருந்தீர்கள்.

அண்மையில் பாராளுமன்றத்தில் மகிந்த ராஜபகஷவை அனுர குமார பாராட்டினார்.

எனவே கொள்கை விடயங்கள் தவிர எமக்கு தனிப்பட்ட முரண்பாடுகள் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை என்ன விடயத்திற்காக அநுர குமார பாராட்டு தெரிவித்தார் என்பதை நாமல் ராஜபகஷ தெரிவிக்கவில்லை. (ம-7)

## கிணற்றில் வீழ்ந்த 4 வயது சிறுமி பலி

(கொழும்பு)

ருவன்வெல்ல, கிரிபோருவ பிரதேசத்தில் உள்ள கிணற்றில் இருந்து 4 வயது சிறுமியின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிணற்றுக்கு அருகில் பேச்சு குறைபாடுள்ள அவரது தாயார் மயங்கி கிடந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

தெவ்மி அமயா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ருவன்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மரம் வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழப்பு

நமுனுகுல கந்தஹேன பகுதியில் வெட்டப்பட்ட மரமொன்று வீழ்ந்ததில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கனவரல்ல 13 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய ஒருவரெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தஹேன பகுதியிலுள்ள தமது மகளின் வீட்டுக்குச் சென்றிருந்த குறித்த நபர், மேலும் இருவருடன் இணைந்து உரிய அனுமதியைப் பெற்று மரமொன்றை வெட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, வெட்டப்பட்ட மரம் குறித்த நபர் மீது வீழ்ந்ததில் சம்பவ இடத்திலேயே அவர் பலியானதாகத் தெரியவந்துள்ளது. (ம-7)

## வான் மோதியதில் பெண் மரணம்

### திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலை - கந்தளாய், அக்போபுர கித்துள் ஊற்றுப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த வான் மோதியதில் குறித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக அக்போபுர பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது, கந்தளாய் கித்துளுத்து பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வான் சாரதி நித்திரை கொண்டமையினால் சாலையோரம் நடந்து சென்ற பெண் மீது மோதியதில் பெண் உயிரிழந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அத்துடன் இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், கித்துள் ஊற்று பகுதியில் தற்போது விபத்து இடம்பெற்ற அதே இடத்தில் கடந்த பதினைந்து நாட்களில் மூன்று விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும்,பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## விபத்தில் சிக்கிய மருத்துவர் உயிரிழப்பு

விபத்தில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் மருத்துவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிலாபம் வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த, நாத்தான்டியா துங்கன்னாவ பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடைய செபாலிகா வனமாலி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 04 ஆம் திகதி காலை சிலாபம் கொழும்பு வீதியில் மாதம்பே கலஹிட்டியாவப் பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தும் சீமெந்து ஏற்றப்பட்ட லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

தேவாலாச் சந்தியில் இருந்து சிலாபம் திசை நோக்கிப் பயணித்த பேருந்து வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் புத்தளம் திசை நோக்கிச் சென்ற சீமெந்து லொறியுடன் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. (ம-7)

## நீதிமன்றில் மனுவை வாபஸ் பெற்ற டயானா கமகே

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயின் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரி அவர் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றில் நேற்று வாபஸ் பெற்றார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குறித்த மனுவை தொடர வேண்டிய அவசியம் இல்லை என டயானா கமகே சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, அதனை வாபஸ் பெற அனுமதிக்குமாறு சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

அதன்படி, மனுவை வாபஸ் பெற உயர் நீதிமன்றம் அனுமதி அளித்தது. (ம-7)

## மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

### பதுளையில் சம்பவம்

பதுளை - வினீதகம பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, 78 வயதுடைய வயோதிபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் தனது தோட்டத்தில் விளையும் பயிர்களை விலங்குகளிடம் இருந்து காப்பாற்ற சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த மின் வேலியில் சிக்கியே உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், இந்த மரணம் குறித்து மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரையரங்குகளுக்குள் கைத்தொலைபேசி எடுத்துச் செல்ல தடை விதிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

திரையரங்குகளுக்குள் கையடக்கத் தொலைபேசிகளை எடுத்துசெல்வதை தடை செய்யுமாறு திரைப்பட இயக்குநரும் இலங்கை திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் தலைவருமான சோமரத்ன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சோமரத்ன திஸாநாயக்க வின் சிங்கபாகு திரைப் படத்தை திரையரங்கில் கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து யூரியூப் அலைவரிசையில் ஔிபரப் பியதாகக் கூறப்படும் கண்டியைச் சேர்ந்த ஒருவரை கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேவையற்ற சூழ்நிலைகளைத் தவிர்க்க எங்களால் முடிந்ததைச் செய்ய வேண்டும். அத்தோடு திரையரங்குகளில் தொலைபேசிகளை தடை செய்வதைத் தான் நாம் செய்ய முடியும்.

அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் உள்ள திரையரங்குகளில் இத்தகைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஒரு திரைப் படத்தை ரசிக்க மக்கள் திரையரங் குகளுக் குச் செல்கிறார்கள்.

ஒரு திரைப்படத்தின் உணர்ச்சிகரமான காட்சியை ரசிக்கும் போது அவர்கள் தங்கள் உள் நாட்டுப் பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள் மற்றும் பிற பிரச்சினைகளை மறந்துவிடுவார்கள்.

ஆனால் தொலைபேசி ஒலிப்பதைக் கேட்கும் போதெல்லாம் மன நிலையை இழக்கிறீர்கள்.

தொலைபேசியில் யாரேனும் அரட்டை அடிப்பதைக் கேட்கும் போது நீங்கள் கவனம் சிதற விடுவீர்கள் ஆகையால் திரையரங் குகளுக்கு தொலைபேசிகளை எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# தேர்தலை இழுத்தடிக்காது உடனடியாக நடத்துங்கள்

## சிறீதரன் எம்.பி கோரிக்கை

(கிளிநொச்சி)

**தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் ஆணைக்குழு உடனடியாகத் தேர்தலை நடத்தி மக்களின் ஜன நாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்ற தேர்தலை அறிவித்து அதனை நிறுத்தியது.

இவ்வாறு காலத்தை இழுத்தடிக்காமல் மக்களின் ஜனநாயக உரிமைக்கு சந்தர்ப்பம் வழங்காது தேர்தலை இழுத்தடிக்காது உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடும் உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எனவும் தெரிவித்தார். (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3172

லது

ஜப்பான்காரன் வேலை செய்யலைனா செத்துடுவான்
சீனாக்காரன் சூதாடாம இருந்தா செத்துடுவான்.
நம்ம சொந்தகாரன் நம்ம சந்தோசமா இருந்தா செத்துடுவான்...



நதீஸ்

கடவுள்- தடைக்கல்லும் உனக்கொரு படிக்கல்லப்பான்னு ஸ்டேரஸ் போட்டவன் நீதானே?
அவன்- ஆமாம்... அதுக்கென்ன இப்ப..?
கடவுள்- கிட்னில மூனு கல்லு குடுத்திருக்கேன் என்னான்னு பாரு...



நமசியா

நாம இல்லாத இடத்தில நம்மள பத்தி பேசுறாங்கன்னா...



ஒன்று நாம பிரபலமாக இருக்கனும் இல்லைன்னா.. நாம அவங்களுக்கு பிராப்ளமா இருக்கனும்

வதுஸ்

லைப் நல்லா தான் போய்க் கொண்டிருந்துச்சு...
உனக்கென்னப்பா வாழ்ற என்று வாய்வச்சிட்டு ஒருத்தன் வந்தான் சார்....



யாதவ்

பற் வாங்கியாச்சு இனி அடி வெளுத்திட வேண்டியது தான்..
சூப்பர் மாப்ள,பெரிய கிரிக்கெட் ப்ளேயரா நீங்க? சொல்லவே இல்ல...
கிரிக்கெட்டா,அய்யோ கொசு பற் மாமா நைட்டு தூங்கவே விட மாட்டிங்குது இந்த கொசு



மதி

உலகத்திலேயே கவலை இல்லாதவர்கள் இரண்டு பேர் ஒருவர் கல்யாணம் ஆகாதவர் இன்னொருவர் செல் போன் இல்லாதவர்....



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுச்சீட்டு...

எடுத்துள்ளது.

அதன்படி, கடவுச்சீட்டினை விண்ணப்பிப்பதற்கு www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக முன் பதிவு செய்யப்பட வேண்டும்.

ஒன்லைனில் பதிவு செய்ததன் பின்னர் முன்னுரிமை முறையின்படி கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படும் என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான புதிய முறை எதிர் வரும் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ம-7)

## யாழிலிருந்து...

வைத்து இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் வைத்து தனியார் பேருந்து காப்பாளர் ஒருவரால் பியர் போத்தல் மூலம் பேருந்துக்கு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலை மேற்கொண்ட நபர் பொதுமக்கள், பயணிகள், சாரதி மற்றும் காப்பாளரினால் பிடிக்கப்பட்டு கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பியர் போத்தலின் கண்ணாடி துகள்கள் பட்டு பயணி ஒருவர் காயமடைந்துள்ளார்.

தனியார் பேருந்து குழுவினருடன் ஏற்பட்ட நேரப்பிரச்சினை காரணமாக இந்தச் செயல் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ம-7,100)

## தேர்தல்...

வழிகாட்டுதல்களை வெளியிடுமாறு தேர்தல் ஆணைக்குழுவிற்கு உத்தரவிடக்கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைதிகளின் உரிமைகளுக்காகச் செயற்படும் சுதேஷ் நந்திமால் டி சில்வா என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ம-7)

## ஜனாதிபதித்...

ஆதரவு வழங்கமாட்டோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர்களான சாகர காரியவசம், நாமல் ராஜபக்ஷ மற்றும் சஞ்ஜீவ எதிரிமான்ன ஆகியோர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இக்கலந்துரையாடியதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டதாவது,

தேர்தல்களுக்கான அறிவிப்பு விடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெற்றவுடன் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது எமது அரசியல் கொள்கையாகும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு நாங்களும் தயார், தேர்தல்கள் ஆணைக்குழுவும் தயார். ஆகவே தேர்தலுக்கு தயாரா, இல்லையா என்பதை ஜனாதிபதி அறிவிக்க வேண்டும். தேர்தலைப் பிற்போடும் வகையில் அரசாங்கம் ஏதேனும் யோசனைகளை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்தால் அதற்கு நாங்கள் ஒருபோதும் ஆதரவு வழங்க மாட்டோம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை ஆணைக்குழு வெளியிட்டதன் பின்னர் ஆறு வாரங்களுக்குள் எமது தேர்தல் பிரசாரங்களை நிறைவு செய்வோம். எமது வேட்பாளரே தேர்தலில் வெற்றி பெறுவார் என்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக் கொள்கிறேன் என்றார். (ம-7)

## சுகாதார...

தொடர்பாகவும் ஆராயும் கண்காணிப்பு விஜயம் ஒன்று நேற்றுப் புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையிலான அமைச்சின் செயலாளர் உள்ளடங்கலான குழுவினர் நேரடியாக வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டதுடன் வெளி நோயாளர் பிரிவு உள்ளடங்கலாக வைத்தியசாலையைப் பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர், அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் அமைச்சரிடம் நேரடியாகக் குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக CT ஸ்கேன் இயந்திரம் இன்மையால் நாள்தோறும் அதிகளவான நோயாளர்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதாகவும் மருத்துவர் பற்றாக்குறை, மருந்து பற்றாக்குறை, சுத்திகரிப்புப் பணியாளர் குறைபாடு, மருத்துவ உபகரணங்கள் குறைபாடு, அவசர நோயாளர் வண்டியின் குறைபாடு உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில் தீர்க்கக் கூடிய மிக முக்கிய விடயங்களை விரைவில் தீர்த்துத் தருவதாகவும் ஏனைய விடயங்கள் வரவு செலவுத் திட்டத்தின்ஊடாகப் பெற்றுத் தருவதாகவும் அமைச்சர் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

குறித்த நிகழ்வில் அமைச்சருடன் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளடங்கலாக பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,285)

## அம்பு...

பிரசவம் இடம்பெற்றுள்ளது.

நிறைமாதக் கர்ப்பவதித் தாய் என்பதனால் பிரசவத்திற்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பும்போது அவருடன் மருத்துவ உதவிக்காக நெடுந்தீவு வைத்திய அதிகாரி, வெளிக்கள மருத்துவ மாது மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் என் போர்உடன்சென்ற காரணத்தால் குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் கடற்படையினரின் பராமரிப்பில் உள்ள அம்புலன்ஸ் படகில் வைத்தே வெளிக்கள மருத்துவ மாதுவின் உதவியுடன் பிரசவம் இடம்பெற்றுள்ளது.

தாயும், சேயும் நலமாக உள்ளதுடன் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு நலமுடன் உள்ளதாக நெடுந்தீவு வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை நெடுந்தீவு வைத்தியசாலைக்கு நிரந்தரமாக மருத்துவ மாது நியமிக்கப்படாமையினாலேயே யாழ் நகருக்கு அனுப்ப வேண்டிய நிலை காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.07.17
சீட்டிழுப்பு இலக்கம் 5537
W 6 7 9 3 7 8
அத சம்பத W 9 3 7 8
சீட்டிழுப்பு இலக்கம் 112
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.07.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1567
I 56 57 76 79 I
Double Chance 33633

மெகா பவர்
திகதி 17/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1885
G 20 37 43 60 72
19083

லக்கி 7 VIP
திகதி 2024.07.17
சீட்டிழுப்பு இலக்கம் 363
Y 9 0 9 1 5 4 Y

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3779
சீட்டிழுப்பு திகதி 17.07.2024
Q 13 30 35 60
Q 31111
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.17
சீட்டிழுப்பு இலக்கம் 0846
மீனம் 12 30 40 47 மீனம்
34232 01

ஜயோதா Jayoda
திகதி 2024.07.17 வெற்றி வாரம் 2043 வர்ணம் மஞ்சள்
30 39 53 57 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 24,422,070.40
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
17.07.2024 வெற்றி வாரம் 245 வர்ணம் பச்சை
B 9 2 8 3 6 6
39957
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,801,520.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2511 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 17.07.2024 தினம் புதன்கிழமை
24 28 43 75 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 99,362,989.60
DLB

சனிதா Shanida
திகதி 2024.07.17 வெற்றி வாரம் 4672
15 24 40 61 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,465,586.80
ரூ. 100,000/- 57165
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4223 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.07.17 தினம் புதன்கிழமை
06 29 31 49 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,676,856.40
932161
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 03 02 41 52 62
1687
17.07.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 533,705,711.80
DLB

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2337
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,310,940.00
அத கோடிபதி ADA KOTIPATHI
04 13 54 64 L
ரூ.100,000/- 449935
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணையம்பதி மூத்தவிநாயகர் ஆலயத்தின்

7ஆம் திருவிழாவான பூங்காவனத் திருவிழாவை முன்னிட்டு

18.07.2024






**பகல் நிகழ்வுகள்**

- சித்தார்தன் பிரதிக்ஷன் குழுவினர், கஜானன் குழுவினர், பதுளைசங்கர் மற்றும் N.R கோவிந்த சாமியின் புதல்வர் N.R.K இரத்தினகுமார் (மாக்கையா) குழுவினர் இணைந்து வழங்கும் நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும்.
- அதனைத் தொடர்ந்து 3.30 மணிக்கு எம்பெருமான் 12 சென்டை மேளங்கள், கேரளகதகளி நடனங்கள், இலங்கையில் புகழ் பூத்த கதிர்காம மயில் நடனம், யானை, சேனை படை சூழ எம்பெருமான் வீதி உலா வந்து பூங்காவனத்தில் அமர்வார்.
- தொடர்ந்து நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும்.

**மாலை நிகழ்வுகள்**

- 6.30 மணிக்கு கொழும்பில் புகழ் பூத்த சுமங்கல வழங்கும் இந்திர கால Megic Show நடைபெறும்.
- அதனைத் தொடர்ந்து இந்தியாவின் புகழ் பூத்த வயலின் இசையுடன் கேரள சென்டை மேளங்களின் மேடைக் கச்சேரி இடம்பெறும்.
- அதனைத் தொடர்ந்து 9.30 மணிக்கு எம்பெருமான் 12 சென்டை மேளங்கள், கேரளகதகளி நடனங்கள், இலங்கையில் புகழ் பூத்த கதிர்காம மயில் நடனம், யானை, சேனை படை சூழ முத்துச் சப்பறத்தில் வீதியுலா வருவார்.

**10.00 மணிக்கு,**

- இலங்கையின் புகழ் பூத்த R.V வாசனின் சாரங்கா இசைக்குழுவுடன் A.R ரகுமானின் இசையில் பாடிய Airtel Super Singer பாடகியுமாகிய ரக்ஷிதா மற்றும் Zee Tamil சரிகமப புகழ் ருத்ரேஸ் இணைந்து வழங்கும் "ரூத்ர தாண்டவம்" இசைச் சங்கமம்.

ஒளியமைப்பு - சுரேஸ் நல்லூர்
ஒலியமைப்பு - செல்வம் சவுண்ஸ் பண்டத்தரிப்பு
சப்பறம் - கந்தசாமி
மேடை - முகுந்தன்

(C-818)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்**
**7 ஆம் திருவிழா உபயகாரர்கள்.**


# பட்டிமன்ற பேச்சாளர்கள் ராஜா, பாரதி பாஸ்கர் இன்று யாழ் வருகை



(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலையத் தின் 75ஆவது ஆண்டு பவள விழாவையொட்டி இடம்பெறும் மாபெரும் இலக்கிய விழாவில் கலந்துகொள்வதற்காகப் புகழ் பெற்ற தென்னிந்தியப் பட்டிமன்றப் பேச்சாளர்களான எஸ். ராஜா, திருமதி பாரதி பாஸ்கர் ஆகிய இருவரும் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் இவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு இன்று இடம்பெறும். நிகழ்வில் பாடசாலை சொற்சமர் விவாத அணிகளில் பங்கேற்போர் மற்றும் பட்டிமன்றங்களில் பங்கேற்போர் பயன் பெறும் வகையில் "விவாத மேடையைக் கையாள்வது எப்படி?" எனும் தலைப்பில் இருவரும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இதேவேளை, அரியாலை சனசமூக நிலைய பவள விழாவையொட்டி மாபெரும் இலக்கிய விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் அரியாலை சனசமூகநிலையத்தின் திறந்தவெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

"வாழ்வில் எப்போதும் உறுதுணையாக இருப்பது நட்பே? உறவே?" எனும் தலைப்பில் எஸ்.ராஜா தலைமையில் திருமதி பாரதி பாஸ்கர், பேராசிரியர் தி.வேல் நம்பி, ந.விஜயசுந்தரம், ச.லலீசன், எஸ்.சஜீவன், செல்வி. ஹார்த்தியாயினி ஆகியோர் பங்கேற்கும் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. (ம-7)

## சாவகச்...


கூறினார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தற்போது நியமனம் பெற்று கடமையில் இருக்கும் அதிகாரியே வைத்தியசாலையின் தற்போதைய பதில்வைத்திய அத்தியட்சகர் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்து சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

அண்மையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் அத்தியட்சகராக வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் கடமைகளைப் பொறுப்பேற்ற நிலையில், விடுமுறையில் இருந்து வந்த வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா தானே சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் என்று தெரிவித்திருந்தார்.

இந் நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவா? கோபாலமூர்த்தி ரஜீவ்வா? என்ற சர்ச்சை எழுந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30,33)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 - 02 - 1942 |  | 16 - 07 - 2024 |

## நாகலிங்கம் குமாரசாமி

(முன்னாள் சாலைப் பரிசோதகர் – இ.போ.ச கோண்டாவில்)

அரசடி கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குமாரசாமி அவர்கள் 16.07.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும் நாகலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தர்மபூபதியின் அன்புக் கணவரும் குமுதினி(அமெரிக்கா), குகதாசன்(குமுதன்,சுவிஸ்), குகாஜினி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகலிங்கம்(அமெரிக்கா), பிறேமலதா(சுவிஸ்), பிரபாகர்(கனடா) ஆகியோரின் மாமனாரும் கவிகேசா, கேசவி, நீரஜா, நிதர்சனா, லக்ஷ்மி, ஆதித், ஆரதி, இனியாள் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2024) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 737 1360

(1499)


## SB TRAVELS AND TOURS(PVT) LTD

டுபாய், மலேசியா, இந்தியா, வியட்னாம் மற்றும் சீனா போன்ற நாடுகளுக்குமான வீசாக்களும் அத்துடன் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குமான வீசாக்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Air Ticketing, Travel Insurance, Travel Itinerary, Srilankan Visa Extension [வெளிநாட்டிற்கான இலங்கை வீசா புதுப்பித்தல்]

HOTLINE NO : 075 555 9932
Jaffna - 021 222 8555, 076 691 1082, 83
Colombo 13 - 011 233 3322, 076 6911089, 90
Colombo 15 - 011 254 0111, 077 108 3480, 81, 82, 83
Email : SBTRAVELSJAFFNA@GMAIL.COM

CONDITION APPLIED (C-817)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

1.முகாமையாளர் 3.அலுவலக உதவியாளர்
2.காசாளர் 4. பேருந்து நடத்துனர்

077 386 6250
077 573 1318

(1502)

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள். (இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0816)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241 (C-0816)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0816)

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 17 37 684

(157)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org